செ.வெ.எண்.360/2021 நாள்.01.09.2021

# திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கொரோனா வழிகாட்டுதலின்படி மாணவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க உரிய முன் ஏற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கொரோனா வழிகாட்டுதலின்படி மாணவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க உரிய முன் ஏற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் கொரோனா வழிகாட்டு நடைமுறைகள் எவ்வாறு கடைபிடிக்கப்படுகின்றன மாணவர்கள் பாதுகாப்பாக இருக்க எவ்வகை முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் கொரோனா வழிகாட்டு நடைமுறைகள் பின்பற்றுவதின் அவசியம் மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றி மாணவர்கள் கட்டாயம் முககவசம் அணிந்து பள்ளிகளுக்கு வர வேண்டும் எனவும் ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி செலுத்திக் கொண்டு கட்டாயம் முககவசம் அணிந்து பள்ளிகளுக்கு வர வேண்டும், மேலும் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு அவர்கள் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்களா என கேட்டு அறிந்து தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று மாணவர்கள் எடுத்துக்கூற வேண்டும் என்று மாணவர்களுக்கு தெரிவித்தார்கள்

பின்னர் நாட்றம்பள்ளி வட்டம் கொத்தூர் துணை சுகாதாரநிலையத்தை பார்வையிட்டு எத்தனை நபர்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்கள் என கேட்டறிந்தார்கள். அப்பகுதியில் உள்ள தின்னகோட்டை கிராமத்தில் உள்ள 30-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு சென்று தடுப்பூசி செலுத்திக்கொள்ள மறுத்த நபர்களுக்கு தடுப்பூசியின் நன்மைகளை மற்றும் அதன் அவசியத்தையும் விளக்கி அவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. வரும் செப்டம்பர் 30-ஆம் தேதிக்குள் திருப்பத்தூர் மாவட்டத்தில் 100 சதவீதம் தடுப்பூசி செலுத்த வேண்டும் எனவும் சுகாதார பணியாளர்கள் முகாம் நடக்கும் இடங்களில் நாளொன்றுக்கு 150 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும் இவ்வாறு நாளொன்றுக்கு 150 நபர்களை தடுப்பூசி செலுத்தினால் திருப்பத்தூர் மாவட்டத்தில் 100 சதவிகிதம் என்ற இலக்கை

எளிதில் எட்டி விடலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுகளின் போது நாட்றம்பள்ளி வட்டாட்சியர் திருமதி.பூங்கொடி, பள்ளி ஆசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**